**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.107/2015**

**வா.சா.1 – சின்னமாதநாயக்கர்**

**நாள்.16.09.2022**

**8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா சொத்தில் புதிய வீட்டை நான் கட்டியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சொத்தை தனித்தானியாக அனுபவம் செய்து வருகிறோமா என்று கேட்டால் கூட்டாகதான் அனுபவம் செய்து வருகிறோம். என் சகோதரர் ஆண்டிமுத்துநாயக்கர் இறந்த பிறகு சொத்துக்கு பட்டா என் பெயரில் கூட்டாக பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை. வழக்கு நிலுவையில் இருக்கும் போது தாவா சொத்தில் உள்ள மரங்களை வெட்டியதாக சொல்லி தங்கப்பாண்டியன் ( 2ம் பிரதிவாதி) புகார் கொடுத்தாரா என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் அதுபோன்று மரங்கள் வெட்டப்படவில்லை. என்னுடன் இந்நீதிமன்றத்திற்கு என்னுடைய மருமகன் வந்துள்ளார். தங்கப்பாண்டியின் தாயார் நத்தம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் சில சொத்துகளை பொருத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார். அதன் பிறகு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதி சொத்தை அனுபவிக்க கூடாது என்ற நோக்கத்தில் நாங்கள் அடாவடியாக நடந்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு இரண்டு திருமணம் நடைபெற்றது. முதல் திருமணம் நான் சிறுவயதாக இருகும்போதே திருமணம் செய்துவைத்தார்கள் அந்த பெண் இறந்துவிட்டார் ஆகவே நான் இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டேன்.

**மறு விசாரணை இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P SARAVANAN

Digitally signed by P SARAVANAN
Date: 2022.09.16 16:43:49 +0530

Additional District Judge,

Dindigul.